**cLkiy¥ng£ilefuh£Á**

**30.07.2020 « njÂa சாதாரண¡ T£l k‹w ãuš**

<table>
<tr><th>Sl No</th><th>MCR No</th><th>Subjects in Agenda</th><th>Decision of the council</th></tr>
<tr><td>1</td><td>1186</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு, நகராட்சியில் உள்ள தெருவிளக்குகள் அனைத்தும் தனியார் நிறுவனமான மெசர்ஸ்.ஸ்நெல் எனர்ஜி எக்யூப்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர் என்ற நிறுவனம் மூலம் 25.03.2015 முதல் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதனால் நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்காக மின் பொருட்கள் மற்றும் மின் உதிரி பாகங்கள் எதுவும் விநியோகம் செய்யப்படுவதில்லை. தற்போது தெருவிளக்கு உதிரி பொருட்கள் எதுவும் கையிருப்பில் இல்லாத காரணத்தினால் நகராட்சிக்கு சொந்தமான தலைமை பணியிடம், நீருயர்த்தி நிலையம், திருமூர்த்தி நகர், நகராட்சி அலுவலகம், மத்திய பேருந்து நிலையம், அம்மா உணவகம் ஆகிய இடங்களில் உள்ள குழல் விளக்குகள் பழுதடைந்து அவற்றை மாற்றி அமைக்க இயலாத நிலையில் உள்ளதால் மேற்படி இடங்களில் குழல் விளக்குகளுக்கு பதிலாக மின் சேமிப்பு விளக்குகள் 4அடி 20வாட்ஸ் LED விளக்கு பிட்டிங்குகள் வாங்கி பொருத்தவும் மேற்படி பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் மெசர்ஸ்.ஆர்.எஸ்.எம், உடுமலைப்பேட்டை என்ற நிறுவனம் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் ரூ.0.40/- இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:-</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கியும், ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 1281/2020/இ2</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது.</td></tr>
<tr><td>2</td><td>1187</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளை மின் ஆற்றல் (ESCO) சேமிப்பு விளக்குகளாக மாற்றி அமைக்கும் பொருட்டு தனியார் நிறுவனமான மெசர்ஸ்.ஸ்நெல் எனர்ஜி எக்யூப்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர் என்ற நிறுவனம் மூலம் 25.03.2015 முதல் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட நிறுவனம் மூலம் கீழ்க்கண்ட விபரப்படியான தெருவிளக்குகளின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
<table>
<tr><td>1.</td><td>15W/20W LED</td><td>:</td><td>2807</td></tr>
<tr><td>2.</td><td>70W SVL/MHL</td><td>:</td><td>42</td></tr>
<tr><td>3.</td><td>130W SVL/250W SVL</td><td>:</td><td>74</td></tr>
<tr><td>4.</td><td>220W SVL/250W SVL</td><td>:</td><td>193</td></tr>
<tr><td>5.</td><td>400W MHL</td><td>:</td><td>196</td></tr>
<tr><td>6.</td><td>1*36W CFL</td><td>:</td><td>114</td></tr>
<tr><td>7.</td><td>2*36W CFL</td><td>:</td><td>1</td></tr>
<tr><td></td><td>Total</td><td>:</td><td>3427 எண்ணிக்கை</td></tr>
</table>
மேலும் தற்போது உடுமலைப்பேட்டை நகராட்சியில் பயன்பாட்டில் இருந்து வரும் மேற்படி நிறுவனம் மூலம் பராமரிக்கப்பட்டு வரும் கீழ்க்கண்ட</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது.</td></tr>
</table>

விபரப்படியான உயர் மின் கோபுர விளக்குகள் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | மத்திய பேருந்து நிலையம் உயர் கோபுர மின் விளக்கு<br>Sc No.301-008-1145 | : | 14*2=28 Lights<br>(400W MHL) |
| 2. | பழைய பஸ் நிலையம் உயர் கோபுர மின் விளக்கு<br>Sc No.301-008-1728 | : | 6*2=12 Lights<br>(400W MHL) |
| 3. | தளி ரோடு நூலகம் அருகில் உயர் கோபுர மின் விளக்கு<br>Sc No.302-010-882 | : | 6*2=12 Lights<br>(400W MHL) |
| 4. | கல்பனா ரோடு சித்திரக்கூடம் அருகில் உயர் கோபுர மின் விளக்கு<br>Sc No.301-014-1471 | : | 6*2=12 Lights<br>(400W MHL) |
| 5. | ருத்திரப்பா நகர் உயர் கோபுர மின் விளக்கு<br>Sc No.302-003-1721 | : | 6*2=12 Lights<br>(400W MHL) |
| 6. | உழவர் சந்தை (ரயில்வே கேட் எதிரில்) உயர் கோபுர மின் விளக்கு<br>Sc No.302-006-919 | : | 6*2=12 Lights<br>(400W MHL) |
| 7. | மத்திய பேருந்து நிலையம் (மேற்கு பகுதி) உயர் கோபுர மின் விளக்கு<br>Sc No.301-008-2223 | : | 6*2=12 Lights<br>(400W MHL) |
| 8. | அண்ணாகுடியிருப்பு உயர் கோபுர மின் விளக்கு<br>Sc No.302-012-378 | : | 6*2=12 Lights<br>(400W MHL) |
| 9. | கொல்லம்பட்டறை அருகில் உயர் கோபுர மின் விளக்கு<br>Sc No.301-009-2483 | : | 6*2=12 Lights<br>(400W MHL) |
| 10. | கல்பனா திடல் காளியம்மன் கோவில் அருகில் உள்ள உயர் கோபுர மின் விளக்கு<br>Sc No.301-014-1671 | : | 6*2=12 Lights<br>(400W MHL) |
| 11. | ஏரிப்பாளையம் உயர் கோபுர மின் விளக்கு<br>Sc No.301-006-1958 | : | 6*2=12 Lights<br>1*4=4 Lights<br>(400W MHL) |
| 12. | ரயில்வே ஸ்டேசன் அருகில் உயர் உள்ள கோபுர மின் விளக்கு<br>Sc No.302-006-899 | : | 6*2=12 Lights<br>1*4=4 Lights<br>(400W MHL) |
| 13. | கொழுமம் ரோடு உயர் கோபுர மின் விளக்கு<br>Sc No.302-013-1345 | : | 6*2=12 Lights<br>1*4=4 Lights<br>(400W MHL) |
| 14. | வெஞ்சமடை உயர் கோபுர மின் விளக்கு<br>Sc No.305-010-633 | : | 6*2=12 Lights<br>(400W MHL) |
| 15. | ஸ்டேட் பேங்க் காலனி உயர் கோபுர மின் விளக்கு<br>Sc No.301-005-894 | : | 6*2=12 Lights<br>(400W MHL) |

மேற்கண்ட உயர் கோபுர மின் விளக்குகள் மட்டும் மேற்படி நிறுவனமான மெசர்ஸ்.ஸ்நெல் எனர்ஜி எக்யூப்மெண்ட்ஸ் பிரைவேட்

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>லிமிடெட், கோயம்புத்தூர் நிறுவனம் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br><br>மேலும் பாராளுமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் அமைக்கப்பட்டு ராஜேந்திரா ரோடு நேதாஜி மைதானத்தின் உட்புறம் வடகிழக்கு மூலையில் பயன்பாட்டில் இருந்து வரும் உயர் கோபுர மின் விளக்கு அமைக்கப்பட்டு ஒரு ஆண்டுக்கு மேல் முடிவடைந்த நிலையில் உள்ளதாலும், மேற்படி விளக்குகள் பழுதடைந்துள்ளதாலும் (விளக்கு விபரம்)
<table>
<tr><td>1.</td><td>ராஜேந்திரா ரோடு நேதாஜி மைதானத்தின் உட்புறம் வடகிழக்கு மூலையில் உள்ள உயர் கோபுர மின் விளக்கு<br>Sc No.302-011-1215</td><td>:</td><td>6*2=12 Lghts<br>(400W MHL)</td></tr>
</table>
மேற்கண்ட பாராளுமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு எண்ணிக்கை உயர் கோபுர மின் விளக்கு (12 விளக்குகள்) ஏற்கெனவே பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் தனியார் நிறுவனமான மெசர்ஸ்.ஸ்நெல் எனர்ஜி எக்யூப்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர் நிறுவனம் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட விபரப்படியான செலவினம் ஆகும்,
<table>
<tr><td>1.</td><td>உயர் கோபுர மின் விளக்கு</td><td>:</td><td>12 எண்ணிக்கை</td></tr>
<tr><td>2.</td><td><u>ஆண்டு பராமரிப்பு செலவினம்</u><br>உயர் கோபுர மின் விளக்குகள் 400 வாட்ஸ் மெட்டல் ஹலாய்டு விளக்குகள் (ஒரு விளக்கின் ஆண்டு பராமரிப்பு செலவினம் ரூ.1900/-</td><td>:</td><td><u>பராமரிப்பு நிறுவனத்தின் ஒப்பந்த அடிப்படையில்</u><br><br>12*1900 = ரூ. 22,800</td></tr>
</table>
மேற்படி தெருவிளக்குகளை மேற்படி நிறுவனம் மூலம் பராமரிப்பு மேற்கொள்ளவும் அதற்காகும் ஆண்டு செலவினம் ரூ.0.23/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>
ந.க.எண் 3506/2012/இ2</td>
<td></td>
</tr>
<tr>
<td>3</td>
<td>1188</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் பாலாறு மற்றும் திருமூர்த்தி அணை மூலம் முதலாம் மற்றும் இரண்டாம் குடிநீர்த் திட்டங்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளில் பகல் மற்றும் இரவு காவல் பணிகள் மேற்கொள்ளவும் குடிநீர் விநியோக பணிகளுக்கும் இந்நகராட்சியில் போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளிகள் அடிப்படையில் 10 பணியாளர்களை திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 2019-2020 ஆம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதங்களின் அடிப்படையில் நாள் ஒன்றுக்கு ரூ.355/- (Mazdoor Grade-I) தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் 01.09.2020 முதல் 28.02.2021 முடிய (6 மாத காலத்திற்கு) பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.7.30 இலட்சம். மேற்கண்ட பணியை ஆண்கள் சுயஉதவிக்குழுக்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:-</u><br><br>
1.மன்றம் அனுமதிக்கலாம்</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>2.மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>ந.க.எண் 1354/2020/இ2</td><td></td></tr>
<tr><td>4</td><td>1189</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சி பொறியியல் பிரிவிற்கு ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக 2 இளநிலை எழுத்தர்களை ஒரு வருட காலம் பணியமர்த்திக் கொள்ளும் பணிக்கு 17.07.2020-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு,<br><table><tr><td>1.</td><td>M/s.RSM & Co</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.40% குறைவு</td></tr><tr><td>2.</td><td>M/s.Raj & Co</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 2.00% அதிகம்</td></tr></table>மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள M/s.RSM & Co மதிப்பீட்டை விட 0.40% குறைவு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கும் பொருட்டும், மேலும் பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியினை பெற்று பணி உத்திரவு வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:-</u> மன்றம்அனுமதிக்கலாம்<br>ந.க.எண் 1172/2020/இ2</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது.</td></tr>
<tr><td>5</td><td>1190</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் இயக்கத்தில் இருந்து வரும் 42 எண்ணிக்கை கணினிகள், 26 எண்ணிக்கை பிரிண்டர்கள், 2 எண்ணிக்கை ஸ்கேனர்கள், 10 எண்ணிக்கை சுவிட்சுகள் மற்றும் நகராட்சியில் அமைக்கப்பட்டுள்ள 5KVA UPS 3 எண்ணிக்கையுடன், 30 எண்ணிக்கை 12Volt Exide Tubular பேட்டரிகள் ஆகியவற்றை ஓராண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு 15.07.2020-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்,<br><table><tr><td>1.</td><td>M/s.Syscon Systems, Coimbatore</td><td>:</td><td>ரூ. 3,98,300/-</td></tr><tr><td>2.</td><td>M/s.Sagar Electronics & Pollachi</td><td>:</td><td>ரூ. 4,080,80/-</td></tr></table>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:-</u><br>மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள மெசர்ஸ்.SysconSystems,Coimbatore என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>ந.க.எண் 737/2020/இ1</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது.</td></tr>
<tr><td>6</td><td>1191</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சிக்குச் சொந்தமான நகராட்சிப் பொறியாளர் (ME) குடியிருப்பில் தற்சமயம் மராமத்துப் பணிகள் செய்வதற்கு ரூ.2.00/- இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:-</u><br>1. மேற்கண்ட பணிக்குத் தேவைப்படும் தொகையினை</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | நகராட்சிப் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**2.** மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் 1360/2020/இ1 | |
| **7** | 1192 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குச் சொந்தமான நகரமைப்பு அலுவலர் (TPO) குடியிருப்பில் மராமத்துப் பணிகள் செய்வதற்கு ரூ.3.50/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>**1.** மேற்கண்ட பணிக்குத் தேவைப்படும் தொகையினை நகராட்சிப் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**2.** மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்<br>1361/2020/இ1 | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது. |
| **8** | 1193 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குச் சொந்தமான நகர்நல அலுவலர் (MHO) குடியிருப்பில் உள்ள கட்டிடத்தின் மேற்பரப்பில் (Roof) உள்ள Pressed Tiles-கள் உடைந்துள்ளதால் தற்சமயம் மழைக்காலங்களில் மழைநீரானது கட்டிடத்தில் இறங்குகிறது. எனவே மேற்கண்ட பணிகளை சரிசெய்வதற்கும், மேலும் கட்டிடத்தில் மராமத்துப் பணிகளை மேற்கொள்வதற்கும் ரூ.5.00/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>**1.** மேற்கண்ட பணிக்குத் தேவைப்படும் தொகையினை நகராட்சிப் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>2. மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் 1362/2020/இ1 | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது. |
| **9** | 1194 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட புதிய டவுன் சர்வே வார்டு எண். E, பிளாக் எண். 4, நகரளவு எண். 68, 69, 71, 72 மற்றும் 73ல் உள்ள இடத்தில் தி/வா நயரா எனர்ஜி லிமிடெட் நிறுவனத்தார் பெட்ரோலிய பொருட்கள் இருப்பு வைத்து விற்பனை செய்ய தடையின்மைச் சான்று வழங்க கோரி திருப்பூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் கடிதம் ந.க.எண். 7921/2020/இ2, நாள். 15.06.2020 கேட்டுள்ளார். அதற்கிணங்க மேற்கண்ட இடமானது அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 3ல் குடியிருப்பு உபயோகப் பகுதியில் தளி ரோட்டினை ஒட்டி உள்ளது. குடியிருப்பு பகுதியில் பெட்ரோலிய பொருட்கள் இருப்பு வைத்து விற்பனை செய்ய தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் - 2019 U/s No. 33ல் Annexure XV III - (xxi) Fuel Filling Station and automobile Service station with installation not exceeding 30 HP வரை வைத்துக்கொள்ள வழி வகை உள்ளதால் பெட்ரோல் நிலையம் அமைக்க **மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம் பெட்ரோல் நிலையப்பொருட்கள் இருப்பு வைத்து விற்பனை செய்ய அனுமதிக்கலாம்<br>ந.க.எண் 1102/2020எப்1 | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| **10** | 1195 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட கணக்கம்பாளையம் கிராமம் புதிய டவுன் சர்வே வார்டு எண். G, பிளாக் எண். 5, நகரளவு எண். 3A, பழைய க.ச.எண். 21Aல் உள்ள இடத்தில் தி/வா. இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் லிமிடெட் நிறுவனத்தார் பெட்ரோலிய பொருட்கள் இருப்பு வைத்து விற்பனை செய்ய தடையின்மைச் சான்று வழங்க கோரி திருப்பூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் கடிதம் ந.க.எண். 6408/2020/இ2, நாள். 14.05.2020 கேட்டுள்ளார். அதற்கிணங்க மேற்கண்ட இடமானது அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 4ல் குடியிருப்பு உபயோகப் பகுதியில் பழனி ரோட்டினை ஒட்டி உள்ளது. குடியிருப்பு பகுதியில் பெட்ரோலிய பொருட்கள் இருப்பு வைத்து விற்பனை செய்ய தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் - 2019 U/s No. 33ல் Annexure XV III - (xxi) Fuel Filling Station and automobile Service station with installation not exceeding 30 HP வரை வைத்துக்கொள்ள வழி வகை உள்ளதால் பெட்ரோல் நிலையம் அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம் பெட்ரோல் நிலைய பொருட்கள் இருப்பு வைத்து விற்பனை செய்ய அனுமதிக்கலாம்<br>ந.க.எண் 1139/2020எப்1 | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| **11** | 1196 | இந்நகராட்சி வார்டு எண்.5 கதவு எண்.சி63, காந்திநகரில் அமைந்துள்ள திரு.எம்.மாணிக்கம் என்பவரது குடியிருப்பின் பழைய சொத்துவரி விதிப்பு எண்.157/1978 ஐ கடந்த 20.08.2018ம் நாளில் நீக்கம் செய்து விட்டு 01.04.2018 முதல் எம்.விஜயராஜன் (1) வி.பரிமளம் (2) ஆகியோர்களின் பெயரில் விதிவிதிப்பு எண். 157/005/01287க்கு புதிய வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது.<br>சொத்துவரியில் கணினியில் எழுப்பப்பட்ட கேட்பில் திரு.மாணிக்கம் என்பவரது பெயரில் இருந்த வரிவிதிப்பு எண்.157/1978 நீக்கம் செய்யப்படாமல் விடுபட்டுவிட்டது. 2019-20 ஆம் ஆண்டிற்கு சொத்துவரி செலுத்தும் போது பழைய வரிவிதிப்பு எண்.157/1978க்கு 2018-19ம் ஆண்டிற்கான நிலுவை ரூ.5010/- மற்றும் 2019-20 ஆண்டிற்கான நடப்பு ரூ.5010/- மொத்தம் ரூ.10020/-ம் திரு.எம்.மாணிக்கம் என்பவரது பெயரில் வசூலாகியுள்ளது. ஒரே சொத்திற்கு இரண்டு வரிவிதிப்பு எண்கள் உருவாகி தவறான கேட்பு இருந்ததால் திரு.விஜயராஜன் செலுத்திய தொகை ரூ.10020/-ம் பழைய வரிவிதிப்பு எண்.157/1978க்கு திரு.மாணிக்கம் பெயரில் வரவாகியுள்ளது. பழைய வரிவிதிப்பு எண்.157/1978ஐ கேட்பிலிருந்து நீக்கம் செய்ய விடுபட்டதால் தவறான கேட்பு எழுப்பப்பட்டு வசூலும் செய்யப்பட்டுவிட்டது. எனவே, திரு.எம்.விஜயராஜன் அவர்கள் 2018-19ம் ஆண்டிற்கு செலுத்திய தொகை ரூ.5010/-ம் 2019-20 ஆம் ஆண்டிற்கு செலுத்திய தொகை ரூ.5010/-ம் சேர்த்து மொத்தம் ரூ.10020/-ஐ சொத்துவரி வசூலிலிருந்து மனுதாரர் திரு.விஜயராஜன் பெயருக்கு காசோலை மூலம் தொகையை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>திரு.எம்.மாணிக்கம் என்பவரது பெயரில் பழைய வரிவிதிப்பு எண்.157/1978ஐ கணினியில் நீக்கம் செய்யாமல் விடுபட்டதால் தவறுதலாக வசூலான தொகை ரூ.10020/-ஐ வருவாய் நிதியிலிருந்து காசோலை மூலம் | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | திரு.எம்.விஜயராஜன் பெயருக்கு திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண்.585/2020/அ1** | |
| **12** | 1197 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான தலைமை குடிநீர் சுத்திகரிப்பு பணியிடத்தில் அமைந்துள்ள இரண்டாவது குடிநீர் திட்ட வடிதள தொட்டிகளை சுத்தம் செய்யும் போது வடிதள தொட்டியின் Outlet Chamber - லிருந்து வெளியேறும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் இரண்டாவது குடிநீர் சுத்த நீர் தேக்கத் தொட்டியிலிருந்து 60 எச்.பி மின் மோட்டார் மூலம் அங்கு அமைக்கப்பட்டுள்ள மேல் நிலைத்தொட்டிக்கு நீரேற்றம் செய்யப்படுகிறது. இதில் மின் தடை ஏற்படும் நேரங்களில் மேற்படி மின் மோட்டார் இயக்குவதற்கு முன் சுத்த நீர் தேக்கத் தொட்டியிலிருக்கும் குடிநீரும் Over Flow ஆகி வெளியேறி விடுகிறது. எனவே இரண்டாவது வடிதள தொட்டிகளின் Outlet Gate Chamber-லிருந்தும் இரண்டாவது சுத்த நீர் தேக்கத் தொட்டியிலிருந்தும் 200mm 8" 6KSC PVC Pipe கள் பதித்து மேற்படி வீ ணாகும் குடிநீரினை முதலாவது குடிநீர் திட்ட சுத்த நீர் தேக்கத் தொட்டிகளில் சேகரித்து குடிநீர் வீ ணாகாமல் குடிநீர் விநியோகம் செய்யவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.0.90/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கியும், மேல்நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்<br>**ந.க.எண் : 1500/2020/இ2** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது. |
| **13** | 1198 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான தலைமை குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் திருமூர்த்தி நகர் முதலாம் குடிநீர் சுத்திகரிப்பு வடிதள தொட்டிகளில் 3 மற்றும் 4ஆம் எண் வடிதள தொட்டிகளின் Inlet Gate Valve மற்றும் Outlet Gate Valve (200mm - 8") கள் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதாகவும், அவற்றினை மாற்றி புதியதாக வால்வுகள் பொருத்தி தருமாறு வடிதள இயக்குபவர் தமது குறிப்பில் கோரியுள்ளார். மேற்படி தொட்டிகளின் வால்வுகளை ஆய்வு செய்ததில் வால்வுகள் பொருத்தப்பட்டு சுமார் 20 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டபடியால் மேற்படி வால்வுகளில் உள்ள Spindle Rod மற்றும் Value Disc ஆகியவை மிகவும் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இந்நிலையில் மேற்படி வால்வுகள் கையாளும் போது மிகுந்த சிரமத்திற்கு ஆளாக வேண்டியுள்ளது. எனவே பொது மக்களின் குடிநீர் விநியோகத்தை கருத்தில் கொண்டு புதியதாக 200mm (8") CI Sluice Valve (IS 14846/2000 P.N.1.0 with ISI Making ) 4 எண்ணிக்கை விநியோகம் செய்து பொருத்தவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.0.99/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கியும், மேல்நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்<br>**ந.க.எண் :**<br>**1319/2020/இ2** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது. |

<table>
<tr>
<td>14</td>
<td>1199</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சி அலுவலகத்தின் பின்புறத்தில் ஈப்பு வாகனங்கள் நிறுத்துவதற்கு Vehicle Parking திறந்த நிலையில் உள்ளதால் வாகனங்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை உள்ளது. எனவே மேற்கண்ட Vehicle Parking-ல் புதியதாக Weldmesh மூலம் Gate அமைப்பதற்கு ரூ.95,000/- மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 1154/29.05.2020ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டதற்கு 22.07.2020-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்,
<table>
<tr><td>1.</td><td>M/s.குப்புசாமி & சன்ஸ், உடுமலை</td><td>:</td><td>மதிப்பீட்டு விலை விகிதம்</td></tr>
<tr><td>2.</td><td>திரு.A.சாகுல் ஹமீது, உடுமலை</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 2.26% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள M/s.குப்புசாமி & சன்ஸ், உடுமலை (மதிப்பீட்டு விலை விகிதம்) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:-</u> மன்றம்அனுமதிக்கலாம்<br>
ந.க.எண் : 855/2020/இ1</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>15</td>
<td>1200</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 30ல் உள்ள மாரியப்பா லேஅவுட் மற்றும் கங்காதரன் லேஅவுட் முதல் வீ தியில் இடிந்த நிலையில் உள்ள சிறுபாலங்களினை அகற்றி விட்டு புதியதாக சிறுபாலங்கள் அமைப்பதற்கு ரூ.2.60/- இலட்சம் மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 1133/31.03.2020ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டதற்கு 22.07.2020-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்,
<table>
<tr><td>1.</td><td>திரு.R.சுப்ரமணியன்</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.02% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.A.சாகுல் ஹமீது, உடுமலை</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.67% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள திரு.R.சுப்ரமணியன் (மதிப்பீட்டை விட 0.02% குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:-</u> மன்றம்அனுமதிக்கலாம்<br>
ந.க.எண் : 697/2020/இ1</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>16</td>
<td>1201</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான கணபதிபாளையம் உரக்கிடங்கில் உள்ள சுற்றுச்சுவரானது இடிந்த நிலையில் உள்ளது. இதனால் மேற்கண்ட இடத்தில் Bio Mining பணி நடைபெறும் பொழுது குப்பைகள் மற்றும் பேப்பர் போன்றவைகள் அருகிலுள்ள விவசாய நிலத்திற்கு செல்கிறது. எனவே மேற்கண்ட இடிந்த நிலையிலுள்ள சுற்றுச் சுவரினை அகற்றிவிட்டு புதியதாக சுற்றுச்சுவர் அமைப்பதற்கு ரூ.1.00/- இலட்சம் மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 1126/31.03.2020ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டதற்கு 22.07.2020-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்,
<table>
<tr><td>1.</td><td>M/s.குப்புசாமி & சன்ஸ் உடுமலை</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.11% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.A.சாகுல் ஹமீது, உடுமலை</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 1.48% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள M/s.குப்புசாமி & சன்ஸ் (மதிப்பீட்டை விட 0.11% குறைவு)</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:-</u> மன்றம்அனுமதிக்கலாம்<br>ந.க.எண் : 629/2020/இ1</td><td></td></tr>
<tr><td>17</td><td>1202</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சி பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் தனியார் கழிவுநீர் வாகனத்திற்கு 10,000 லிட்டர் கொள்ளளவிற்கு ரூபாய்.300/- வீதம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (கழிவுநீர் சுத்திகரிப்பு செய்வதற்கு) கழிவுநீர் வாகன உரிமையாளர்கள் உடுமலைப்பேட்டை நகராட்சி பகுதிகளில் 4000,5000 மற்றும் 6000ம் லிட்டர் கொள்ளளவு கொண்ட வாகனம்தான் உள்ளது எனவும், எனவே அதற்கு உரிய கட்டணத்தை நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் விண்ணப்பித்துள்ளார்கள். அதன்படி 1000 லிட்டருக்கு ரூபாய்.30/-வீதம் கட்டணம் நிர்ணயம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது,<br><br><u>அலுவலகக்குறிப்பு:-</u> மன்றம்அனுமதிக்கலாம்<br>ந.க.எண் : 963/2020/இ2</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது.</td></tr>
<tr><td>18</td><td>1203</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் லாரி TN 78X 4768-க்கு ஆயில் சர்வீஸ் செய்து, பழுது, பராமரிப்பு செலவுகள், தகுதிச்சான்று புதுப்பித்தல் மற்றும் காப்பீடு ஆகிய பணிகள் மேற்கொள்வதற்கு 24.07.2020-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்,<br><br><table><tr><td>1.</td><td>M/s.Guruvayurappan Auto Mobiles, Udumalpet</td><td>:</td><td>ரூ. 47,185/-</td></tr><tr><td>2.</td><td>M/s.Jose Devasy & Co, Pollachi</td><td>:</td><td>ரூ. 56,640/-</td></tr></table>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:-</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கியும், ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>ந.க.எண் : 1280/2020/இ2</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td>19</td>
<td>1204</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் லாரி TN 78X 6177-க்கு ஆயில் சர்வீ ஸ் செய்து, பழுது, பராமரிப்பு செலவுகள், தகுதிச்சான்று புதுப்பித்தல் மற்றும் காப்பீடு ஆகிய பணிகள் மேற்கொள்வதற்கு 24.07.2020-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்,
<table>
<tr><td>1.</td><td>M/s.Guruvayurappan Auto Mobiles, Udumalpet</td><td>:</td><td>ரூ. 42,730/-</td></tr>
<tr><td>2.</td><td>M/s.Jose Devasy & Co, Pollachi</td><td>:</td><td>ரூ. 56,640/-</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:-</u><br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கியும், ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>
ந.க.எண் : 1198/2020/இ2</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>20</td>
<td>1205</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு தலைமை குடிநீர் நிலையத்தில் இருந்து வரும் தண்ணீ ரில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு நாள் ஒன்றுக்கு 350 கிலோ அளவிற்கு சோடியம் ஹைபோ குளோரைட் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.9.80/- இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 1181/30.06.2020ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டதற்கு 24.07.2020-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்,
<table>
<tr><td>1.</td><td>M/s.Sri Senthur Murugan Chem Tech, Namakkal</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 3.85% அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>M/s.Sri Vinayaga Enterprises,Namakkal</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 20.88% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள M/s.Sri Senthur Murugan Chem Tech, Namakkal (மதிப்பீட்டை விட 3.85% அதிகம்) அவர்களிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில் விலைக்குறைப்பு செய்ய இயலாது என்று தெரிவித்துள்ளார். எனவே அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கும் பொருட்டும், மேலும் பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியினை பெற்று பணி உத்திரவு வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:-</u> மன்றம் அனுமதி வழங்கலாம்<br>
ந.க.எண் : 001266/2020/இ2</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>21</td>
<td>1206</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சி குடிநீர் மேல்நிலை தொட்டிகளில் இரவு மற்றும் பகல் நேரக்காவல் பணிகள் மற்றும் குடிநீர் பணிகள் ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலத்திற்கு மேற்கொள்ள மஸ்தூர் நிலை-I (Mazdoor Category-I) 10</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>பணியாட்களை அமர்த்தும் பணிக்கு ரூ.7.30/- இலட்சத்திற்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 30.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்,
<table>
<tr><td>1.</td><td>நண்பர்கள் ஆண்கள் சுய உதவிக்குழு, உடுமலை</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.28% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>APJ அப்துல்கலாம் ஆண்கள் சுய உதவிக்குழு, உடுமலை</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 1.41% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள நண்பர்கள் ஆண்கள் சுய உதவிக்குழு, உடுமலை (மதிப்பீட்டை விட 0.28% குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:-</u> மன்றம் அனுமதி வழங்கலாம்<br>
ந.க.எண் : 1354/2020/இ2</td>
<td>ப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>22</td>
<td>1207</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான திருமூர்த்தி நகர் தலைமை நீருயர்த்தி நிலையத்தில் 20 எச்.பி, 50 எச்.பி, 30 கே.வி.ஏ ஜெனரேட்டர், 75 கே.வி.ஏ ஜெனரேட்டர் அறைகள் மற்றும் அலுவலக அறை ஆகிய பகுதிகளில் உள்ள குழல் விளக்குகளுக்கான வயரிங் செய்து சுமார் 25 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டபடியால் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனால் மழைக்காலங்களில் மின் கசிவுகள் ஏற்பட்டு விபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மேற்படி அறைகளுக்கு புதிதாக வயரிங் செய்து, பழுதுகளை சரிசெய்யவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.0.40/- இலட்சத்திற்கும், மேற்படி பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் மெசர்ஸ்.ஆர்.எஸ்.எம் & கோ உடுமலைப்பேட்டை என்ற நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:-</u><br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>
2. மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கியும், ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண் 1338/2020/இ2</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>23</td>
<td>1208</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் இரண்டு எண்ணிக்கையிலான ஏழு வருடத்திற்கு முந்தைய கணிணிகள் பயன்பாட்டில் உள்ளது. இவற்றில் தற்போது ஒரு கணினி பழுதாகிய நிலையில் உள்ளது. நகர்நல அலுவலரின் பயன்பாட்டில் உள்ள கணினியை சுகாதார ஆய்வாளர்கள் பிறப்பு இறப்பு பதிவுக்கும், சான்றிதழ் வழங்கவும் பயன்படுத்தி வருகிறார்கள். எனவே தற்போது நகர்நல அலுவலருக்கும், மேலாளருக்கும் புதிதாக கணினிகள் தேவைப்படுவதால் இரண்டு எண்ணிக்கை கணினிகள் மற்றும் இரண்டு எண்ணிக்கை பிரிண்டர்களும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரிப் பெறவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.1.40/-இலட்சத்திற்கும், மேல்நடவடிக்கைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:-</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கியும் ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன்</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**ந.க.எண் : 1065/2020/இ1** | |

**ஆணையாளர் (கூ.பொ) / தனி அலுவலர்**
**உடுமலைப்பேட்டை நகராட்சி**